# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Multidisilinary Journal )
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :24 October 2024
கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# கல்வெட்டியல்

# பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து

# Women's Enmity — Based on Literature and Inscriptions

முதுமுனைவர்
பிரியாகிருஷ்ணன்
தொல்லியல் ஆய்வாளர்
சென்னை

**ஆய்வுச் சுருக்கம்:**

மனிதனின் வாழ்வியல் கூறுகளில் மெய்ப்பாடுகளின் பிரதிபலிப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. உள்ளத்தில் நிகழும் அக உணர்வுகள் உடம்பின் உறுப்புகளால் வெளிப்படுதலை மெய்ப்பாடுகள் என்கின்றோம். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எட்டு மெய்ப்பாடுகள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. இதில் வெகுளி என்பது சினம் என்ற பொருளில் கையாளப்படுகின்றது. இந்த சினத்தால் ஏற்படும் உணர்வால் உரைப்பது வஞ்சினம் அதாவது சபதம் என்பது. இதுகுறித்து தமிழிலக்கியங்கள் இலக்கணமும் வகுத்திருக்கின்றன. இலக்கியங்களும் படைத்திருக்கின்றன. அதனைக் கல்வெட்டுகள் வழியாக ஆவணமாகவும் பதிவு செய்திருக்கின்றன. போர்க் காலத்தில் மட்டுமல்லாது தனிப்பட்ட வஞ்சின மொழிகளும் உண்டு. இது குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## *Abctract:*

*In human life, the expression of emotions plays a vital role. The outward manifestation of inner feelings through bodily expressions is referred to as "meyppādu" or expressions. Ancient Tamil grammar, specifically the work "Tholkappiyam," identifies eight primary emotions, laughter, weeping, shyness, goosebumps, fear, pride, anger, and joy. Among these, "anger" is referred to as "vekuli," which conveys a sense of wrath or rage. The intense emotion of anger often leads to expressions of enmity or vows, referred to as "vanjinam" or oaths. Tamil literature has elaborated on these expressions, defining them through grammatical frameworks, while also creating literary depictions that portray them. Additionally, inscriptions have documented these expressions as historical records. Such expressions of enmity are not limited to wartime alone but also exist as personal vows of animosity. This essay aims to explore these expressions further.*

**திறவுச் சொற்கள்:** வஞ்சினம், கல்வெட்டில் வஞ்சினம், புறப்பொருள் வெண்பாமாலை, சிலப்பதிகாரம், மெய்ப்பாடுகள்.

*Keywords: vanjinam,inscription,puraporul venpamaalai,silappathikaaram,meypaadukal*

**முன்னுரை:**

பண்டைக்காலத்தில் பகைவர் போரிட வருகையில் அவரை எதிர்த்துப் போருக்கு எழுதல் காஞ்சித்திணையாகும். அவ்வாறு போருக்கு எழும் போது பகைவரை வென்று வாகை சூடுவேன் எனக் கூறுவதை வஞ்சின மொழி என்பர். வஞ்சினம் என்பது புறத்திணையில் ஒரு புகழ்த்துறை. இத்துறையில் மறவர்கள் தம் பெருமையை தாமே எடுத்து கூறுவர்.. ஐயனாரிதனார் அருளிய புறப்பொருள் வெண்பாமாலையில் காஞ்சிப் படலத்தில் காஞ்சியதர்வு, தழிஞ்சி, படை வழக்கு, பெருங்காஞ்சி, வாள் செலவு, குடைச்செலவு, வஞ்சினக் காஞ்சி, போக்கோள் நிலை, தலைக்காஞ்சி, தலைமாராயம், தலையொடு முடிதல், மறக்காஞ்சி, பேய்நிலை, பேய்க் காஞ்சி, தொட்டாக்காஞ்சி, தொடாக் காஞ்சி, மன்னைக்காஞ்சி, கட்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, முனைகடி, முன்னிருப்பு என வரும் இருபத்தொன்றும் இத்திணையின் துறைகளாக எடுத்துரைக்கின்றார். இத்துறைகளுள் வஞ்சினக் காஞ்சி என்பது, இன்னது பிழைப்பின் இன்னவறாகக் கடவேன் ( தொல்:புறத்: 19) எனக் கூறுதல். இதனால் சொல்லானது மறமாண்பும், மானவுணர்ச்சியும் குறிக்கோளானது செப்பமும் புலனாகும்.

**புறப்பொருள் பாமாலையில் வஞ்சினக் காஞ்சியின் இலக்கணம்:**

வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப

வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று

செவ்விய சினத்தைக் கொண்டோனான காஞ்சி வேந்தன், தன் நாட்டின்மேற் படையொடுவந்த மாற்றானைப் பணிவித்தலின் பொருட்டு ,வஞ்சினம் கூறிய கூறுபாட்டினைச் சொல்வது, வஞ்சினக் காஞ்சி ஆகும்.

இன்று பகலோன் இறாவாமுன் ஒன்னாரை

வென்று களங்கொள்ளாது வேலுயர்ப்பின் - என்றும்

அரணழியப் பாயும் அடையார் முன் நிற்பேன்

முரணழிய முன்முன் மொழிந்து (புறப்பொருள் வெண்பாமாமலை:69)

இன்று பகலவன் படுவதன் முன்பாகவே, யான் பகைவரை வென்று களங்கொள்வேன். அங்ஙனம் வென்று களங் கொள்ளாதபடி ,யான் என் வேலினை உயிப்பேனாயின், என் அரண் அழியுமாறு

பாய்ந்துவரும் பகைவரின் முன்பாக, எனது மாறுபாடி கெட, முன்னே முன்னே பணிவான சொற்களைச் சொல்ல, எந்நாளும் வணங்கி நிற்பேனாகுக! இவ்வாறாக புறத்திணையில் வஞ்சினக்காஞ்சிக் குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

**பெண்களின் வஞ்சினம் மொழி:**

அக்காலத்து பழக்கவழக்கங்களையும் பண்பாட்டையும் நம்மால் உணர்ந்துகொள்ள இலக்கியங்களும் கல்வெட்டுகளும் சான்றுகளாக அமைகிறது. போரினாலோ அல்லது வேறு காரணங்களாலோ கணவர் இறந்துபடின் பெண்கள் உயிர் வாழ விரும்புவதில்லை என்பது தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. "போரில் இறந்த வீரனின் மனைவி கணவனின் சிதையில் தீப்பாய்ந்து உயிர் துறக்கும் நிகழ்வே சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என அழைக்கப்பட்டது. இது மனைவியின் சுயவிருப்பத்தின் பேரிலும், சில சமயம் உடன் இருப்பவர்களின் வற்புறுத்தல் மற்றும் தற்காப்பு உள்ளிட்ட பல காரணங்களுக்காவும் உடன்கட்டை ஏறுதல் நிகழ்ந்ததாக அறிகிறோம்.'' பொதுவாக அந்தக் காலத்தில் மன்னர்கள், அமைச்சர்கள், படைத் தலைவர்கள் போன்ற உயர் நிலையில் உள்ளவர்களின் மனைவிமார்கள் மட்டுமே உடன்கட்டை ஏறினர். ஆனால் காலப்போக்கில் சமுதாயத்தின் ஒரு அங்கமாகவே அது மாறிவிட்டதாகத் தெரிகிறது. இது பெண்களின் வீரம் மற்றும் கற்புடைமையைப் பற்றிய அன்றைய நிலையினை எடுத்து காட்டுவதாக அமைகிறது.

**இலக்கியங்களில் வஞ்சினக்கூற்று:**

வஞ்சினம் குறித்து "வீரயுகத் தலைவனின் ஆளுமைத்திறனை (personality) விரித்துரைக்கப் பாடல்களில் பாணர்களால் பயன்படுத்தப்படுகிறது. மறத்தின் அதன் ஆற்றலில் வெளிப்படும் வெஞ்சினத்தின் அடிப்படையே வஞ்சினம் என்றும் கூறுவர்'' (ந.கடிகாசலம் ச.சிவகாமி சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு ப.361 )

காஞ்சித் திணையில் அமைந்துள்ள வஞ்சினம் கூறுதல் துறையில் புறநானூற்றில் மூன்று பாடல்கள் (புறம்:71,72,73) குறிப்பிடப்படுகிறது. பூதப்பாண்டியன், தலையாலங்காணத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சோழன் நலங்கிள்ளி என்ற மூவர் தங்கள் வஞ்சினப் பாக்களில் இல்லறப் பெருமை, செங்கோல் பெருமை, நட்புப்பெருமை, குடிப்பெருமை ஆகியவற்றைத் தம் வாயால் தாமே பறைசாற்றிக் கொள்வதாய் அமைகிறது.

**இலக்கியங்களில் பெண்களின் வஞ்சினம்:** இலக்கியங்களில் ஆங்காங்கே சில பாடல்கள் மூலம் பெண்களின் வஞ்சினமொழியை அறிய முடிகிறது. இன்னார்க்குத்தான் வஞ்சின மொழி என்று கொள்வதற்கு இல்லை. வஞ்சின மொழி என்பது அவர்களது சூழலே தீர்மானிக்கின்றது என்பதை இலக்கியங்கள் பதிவு செய்கிறது.

சான்றாக ,

இரந்தோர்க் கீயாது ஈட்டியோன் பொருள்போல்

பரந்து வெளிப்படா தாகி

வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே (அகம். 276)

என்று பரத்தையின் வஞ்சினமொழியினை அகநானூற்றில் உள்ள பாடலால் அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் வஞ்சினம் குறித்துப் பதிவு செய்கிறார் இளங்கோ அடிகள். கண்ணகியின் வஞ்சின மொழியும் (வஞ்சினமாலை 36-38), சிலம்பில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுக்க எண்ணுகையில் வஞ்சின மொழியும் சிலம்பு (கால்கோட்காதை - 9-18), கோவலனின் மறைவால் துயரம் கொண்டு மதுரையை எரித்த கண்ணகியிடம் மதுராபதித் தெய்வம் அவளது பழம்பிறப்பை உணர்த்தும்போது நீலியின் வஞ்சின மொழியும் (சிலம்பு:கட்டுரை காதை 166 - 168), கோவலனின் பண்புநலனை விளக்குமிடத்தில் கீரியைக் கொன்ற பார்ப்பினியின் கதை இடம் பெறுகின்றது. அங்கு பார்ப்பினியின் வஞ்சின மொழியும் (சிலம்பு:அடைக்கலக்காதை54-56). சிலப்பதிகாரத்தில் நான்கு இடங்களில் வஞ்சினமொழிகள் குறிப்பிடப்படுவதை அறியமுடிகிறது.

மேற்கூறிய பாடல்களில் குறிப்பாக, சிலப்பதிகாரத்தில் பெண்களின் வஞ்சின மொழிகள் மூன்று இடங்களில் குறிப்பிடப்படுகின்றன. அகநானூற்றில் ஒரு இடத்திலும் பெண்ணின் வஞ்சின மொழி பதிவாகி இருக்கின்றது. இவை யாவும் பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் நிகழ்ந்த சூழல்களில் எழும் சினத்தை அறிவிக்கும் வஞ்சின மொழியாகவே உள்ளது. ஆனால் பின்வரும் கல்வெட்டில் வேளக்கார படையில் இருக்கும் பெண்ணொருத்தி, ஒரு வேளை தனது அரசன் மற்றும் கணவர் போரில் வீரமரணம் அடைந்தால் தான் உயிர் வாழமாட்டேன் என்று வஞ்சினம் மொழிவதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கல்வெட்டில் வேளக்காரப் படையில் பெண்ணின் வஞ்சினம்:**

பண்டைக் காலம் முதலே பெண்கள் படைகளில் இருந்தனர் என்பதற்கு இலக்கியங்கள் வாயிலாகப் பல சான்றுகள் உண்டு. அதேபோல் கல்வெட்டுகளிலும் காணமுடிகின்றது. அக்காலத்தில் முடியுடை வேந்தர்கள் மட்டுமன்றி சிற்றரசர்களும் வேளக்கார படை என்ற படைப்பிரிவை வைத்திருந்தனர். அப்படையில் ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் இருந்தனர் என்பதை அறிய முடிகிறது. இது அரசரைப் பகைவர் அணுகாவண்ணம் காத்தும், போரின்போது பாதுக்காப்பை அதிகரிக்கத் தலைமையேற்று செயல்படுத்தவும் உதவியிருக்கின்றது. இவர்களைப் பற்றி, கவர்காற் கூளியர் என்று பதிற்றுப்பத்து கூறும். அதற்கு விளக்கமாக,“அவர் மென்மேற்

சென்று கொண்டே இருப்பவராதலினால் கூர்நல் அம்பின் கொடுவிற் கூளியர் கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில் கொள்பதம் ஒழிய வீசிய புலவம்'' என இவரைப் பற்றி கல்லாடனாரும் (புறம். 23) கூறுவர் ''. (பக். 47, ப. பத்து, புலியூர் கேசிகன்)

மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு ஒன்று எலவானாசூர்க் கோயிலில் காணப்படுகின்றது . அதில் ஒரு வீரப்பெண்ணின் வஞ்சினம் குறிப்பிடப்பட்டுள்ளது .மலையமான் நாட்டு மன்னனான எதிரிகள் நாயன் என்பானுடைய வேளக்கார படையில் ,தேவப் பெருமாள் என்பவளும் இருந்தாள். அவள், தன் அரசன் இறந்த பிறகும், தன் கணவன் இறந்த பிறகும் தான் உயிர் வாழ்வதில்லை என்று உறுதி பூண்டதாகப் பின்வரும் கல்வெட்டுச் செய்தியால் அறியமுடிகின்றது.

ஸ்வஸ்திஸ்ரீ (இராஜ)ரா(ஜ) மலையகுலராயநான நீரேற்ற

பெருமாளான எதிரிகள் நாயநுக்கு இவ் வேளக்காரியான

தேவப் பெருமாளேன் எதிரிகள் நாயனுக்குப் பின்பு இருந்

தேநாகில் என் மாடு ஒட்டி மாற்கு மண்டைய்யு மிட்டு

இவர்களுக்கு நீருங் குடுத்து இவர்கள் கலச்சோற்றையும்

உண்கிறேன் என்மிணாளன் ஒடு என்னைச் சாவ வேண்டா

மென்பார் என்மிணாளன் எறுகிற குதிரைக்குப் புல்லு இடும்

காமிகந் எதிரிகள் நாயக முதிமையானுக்கு தன்

மிணாட்டியையுங் குடுப்பான் நாஞ் செயா திருந்தேநாகில்

என்னை நெருப்பில் கட்டி புகடுதல் கொல்லுதல் செய்தவன்

தன்னோட்டையாற்கு தந் முணுட்டியையும் குடுத்து என்

மிணாளன் ஏறுகிற குதிரைக்கு புல்லு இடுகிற காமிசநான

எதிரிகள் நாயக முதுமையாகுக்கு தன் மிணாட்டியை குடுப்பான்

என்னைக் கண்டால் கொல்லாதான்

என்று தன் அரசன் இறந்தபிறகோ, தன் கணவன் இறந்த பிறகோ தான் உயிர் வாழ்ந்தால் தனக்கு எத்தகைய கேடு வரவேண்டும் என்பதை மிகக் கடுமையான சொற்களால் வஞ்சினம் உரைக்கிறாள் இப்பெண் என்பதை இக்கல்வெட்டுக் காட்டுகின்றது.

**முடிவுரை:**

இவ்வாறாக , தனிப்பட்ட சூழலில் ஏற்படும் கடினமானச் சூழலுகளில் பெண்கள் தனக்குத்தானே வஞ்சினமொழி கூறிக்கொள்வதும் இன்றும் நடைமுறையில் உள்ள வழக்கமாகும். வஞ்சின மொழியினை நிறைவேற்றும் தன்னம்பிக்கையும் வீரமும் அவற்றின்வழி அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்:**


1. தொல்காப்பியம்
2. அகநானூறு -276
3. புறநானூறு -71
4. புறநானூறு -72
5. புறநானூறு -73
6. சிலப்பதிகாரம்
7. பதிற்றுப்பத்து தெளிவுரை , புலியூர் கேசிகன்
8. குப்புசாமி.சு, வரலாற்று வடிவங்கள்
9. ஆய்வுக்கட்டுரை

உயிருடன் புதைக்கப்பட்டப் பெண்கள் -தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் முன்வைத்து மீள்பதிவு- முனைவர் பிரியாகிருஷ்ணன்,அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் — கோட்டை 3, வாயில் 11.


## Reference


1.Thilkappiyam

2.aganaanuru -276

3.purananuru -71

4. purananuru -72

5. purananuru -73

6.silapathikaram

7. pathitturupaththu,puliyuurkesigan

8.kuppusami.k.varalatru vadivangkal

9. uyurudan puthaikkappatta pengal- thaamarappaakkam kalvettu munvaiththu — munaivar priyakrishnan-Arani International e Journal of Tamil Research,VOL3,issue11.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com